**செ.வெ.எண்: 549/2016** **நாள்: 1.12.2016**

**திருவண்ணாமலை நகராட்சி**
**திருகார்த்திகை தீபத் திருவிழா – 2016**
**பத்திரிக்கை செய்தி**

2016ம் ஆண்டு திருக்கார்த்திகை தீபத் திருவிழாவினை முன்னிட்டு பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும், தேரோட்டத்திற்கும் இடையூறு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு தீபத் திருவிழா காலங்களில் 03.12.2016 முதல் 15.12.2016 வரை இந்நகரில் சாலையோரங்களில் அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான திருவிழாக் கால பொது ஏலம் இவ்வாண்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.38812/2014/ஆர்2 எண்ணிட்ட 21.11.2016 ஆம் தேதிய உத்திரவின்படியும், மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் உத்திரவின்படியும், இந்நகராட்சியால் இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், தீபத் திருவிழா காலங்களில் சாலையோர தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையை எந்த நபருக்கும் இந்நகராட்சியால் குத்தகைக்கு வழங்கப்படவில்லை. தற்காலிக கடைகளுக்கு எவ்வித தொகையும் நகராட்சியால் வசூலிக்கப்படமாட்டாது. இதற்கு மாறாக எவரேனும் பொது மக்களை அச்சுறுத்தி தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவது தெரியவருமானால், சம்மந்தப்பட்ட நபர்களின் மீது கடுமையான சட்டபூர்வ கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தீபத் திருவிழா நாட்களில் தற்காலிக கடைகளுக்கு கட்டணம் யாராவது வசூலிப்பதாக பொது மக்களுக்கு தெரியவந்தால் அருகிலுள்ள காவல் துறை அலுவலகத்திற்கும், நகராட்சி அலுவலகத்திற்கும் தொலைபேசி மூலமாகவோ அல்லது எழுத்து பூர்வமாகவோ தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிப்பவரின் விவரம் பாதுகாக்கப்படும். பொது மக்கள் தங்களின் ஒத்துழைப்பினை நல்கிடுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தகவல் தெரிவிக்க: நகராட்சி அலுவலக
தொலைபேசி எண்கள்: 04175 – 222344 (ம) 04175 – 222248

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவண்ணாமலை.**